ලංකා කොමියුනිස්ට් එක්සත් කේන්ද්‍රය
இலங்கை கொம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரம்
Ceylon Communist Unity Centre
NO. 152 1/3, HULFTSDORP STREET, COLOMBO -12, SRI LANKA

ஊடக சந்திப்பு

22.07.2020 3.30 மணி

பிரைட்டன் ரெஸ்ட், 214/2, மெசெஞ்சர் வீதி கொழும்பு – 12

2015 முதல் 2019 இறுதிவரை ஒப்பீட்டளவில் எமது நாட்டிலிருந்த ஜனநாயக இடைவெளியை மீட்டு முன்னேற்றுவதற்காகவும், முன்னேற்றகரமான ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்காகவும் இன, மத அடிப்படைவாதங்களை தோற்கடித்து அனைத்து இன, மதத்தவர்களிடம் உண்மையான சமத்துவத்தையும் ஐக்கியத்தையும் நிலைநாட்டுவதற்காகவும் மக்கள் விரோத ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவையும் அதனோடு கூட்டிணைந்து இருப்பவர்களையும் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் வெற்றியடையவிடாது தடுக்க மக்கள் அவர்களின் வாக்குகளை பயன்படுத்த வேண்டும். பாராளுமன்றத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை மட்டுமன்றி அறுதிப்பெறும்பான்மை ஆசணங்களைள் பெறுவதனையும் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு போட்டியிடுகின்ற ஏனைய கட்சிகளில் அமைப்புக்களில் ஒப்பீட்டளவில் மக்கள் ஜனநாயகத்தின் பக்கம் நிற்கும் வெற்றி வாய்ப்புள்ள கட்சிகளுக்கு அமைப்புகளுக்கு மக்கள் வாக்களித்து அவற்றின் ஆசனங்களை பாராளுமன்றில் அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

இவ்வாறு இலங்கை கொம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரம் கோரிக்கை விடுத்துள்ளது. கொழும்பு, பிரைட்டன் ஹோட்டலில் அக்கேந்திரத்தின் தலைவர் டபிள்யூ.வீ. சோமரத்ன, பொதுச் செயலாளர் இ.தம்பையா, பொருளாளர் ஆர்.நெல்சன் மோகன்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு நடாத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

அவ்வூடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,



Email: ceyloncuc@gmail.com 0714302909 / 0755432347

Scanned by TapScanner

கடந்த அரசாங்கத்தின் மீது ஊழல், மோசடிகள் போன்ற பொதுவான குற்றச்சாட்டுக்கள் இருந்தபோதும் அது செயல்திறனின்றி இருந்தபோதும் 2015 முதல் மீண்டும் ஜனநாயக இடைவெளி ஏற்பட்டது. இவ்விடைவெளியில் ஜனநாயக மற்றும் இடதுசாரி சக்திகள் விழிப்புடன் செயற்படத் தவறியமையால், அவ்விடைவெளியை இல்லாமல் செய்யும் அரசியல் அடிப்படையினைக் கொண்ட கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அவரால் ஏற்கனவே இருந்த ஜனநாயக இடைவெளி இல்லாமலாக்கப்பட்டுள்ளது. அரசியல் யாப்பிற்கான 19 வது திருத்தச் சட்டத்தினால் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் பாராளுமன்றமும் இல்லாத நிலையில் கோட்டாபய எதேச்சதிகாரமாக செயற்பட்டு வருகிறார். சிவில் விடையங்களிலும் இராணுவ ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகிறார். அவரின் பெரும்பான்மை பௌத்த சிங்கள மேலாதிக்கம் அடக்கப்படுகின்ற தமிழ், முஸ்லிம், மலையக தேசிய இனத்தவர்களிடையே அதிருப்தியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவர் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதனை நிராகரித்து வருகின்றார்.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் பிரதமர் மகிந்த ராஜபக்சவும் அங்கம் வகிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசியல் யாப்பின் 13வது, 19வது திருத்தச் சட்டங்களை நீக்கவும், சுயாதீன ஆணைக்குழுக்களை நீக்கவும் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வெற்றியை பெற்றுத்தருமாறு கோரி நிற்கின்றது. அம்முன்னனிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் 13வது 19வது திருத்தச் சட்டங்களை நீக்குவதாகவும், சுயாதீன ஆணைக் குழுக்களையும் நீக்குவதாகவும் வாக்குறுதி அளிக்கப்படுகிறது. இது நடந்தால் நாட்டில் எஞ்சியிருக்கும் ஜனநாயக சூழ்நிலையும் இல்லாமல் போய்விடும்.

அனைத்து உலக நாடுகளையும் மக்களையும் பாரிய ஆபத்திற்குள் தள்ளி இருக்கும் கொரோனா தொற்று எங்களது நாட்டினதும் மக்களினதும் இருப்பையும் தலைகீழாக மாற்றியுள்ளது. நோய் தொற்று அச்சுறுத்தலாக இருப்பதுடன் பல்லாயிரக் கணக்கானவர்கள் தொழில் இழந்துள்ளனர். மக்களின் வாழ்வாதாரம் பெரிதாக பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு சிறு சிறு தற்காலிக சலுகைகள் தீர்வாகாது. ஜனரஞ்சக பேச்சுக்களும் நடவடிக்கைகளும் போலி சுதேசியமும், போலி இடதுசாரி சார்பும் தீர்வாகாது. கொரோனா நோய் தொற்றையும், அதனால் ஏற்பட்டுள்ள எதிரிடை விளைவுகளையும் மக்கள் நலனை முதன்மைப்படுத்திய



Scanned by TapScanner

கொள்கைகளாலும் திட்டமிட்ட நடவடிக்கைகளாலுமே எதிர்கொள்ள முடியும். ஜனாதிபதி கோட்டாபய முன்னெடுத்துவரும் பாதுகாப்பு படையினரை முதன்மைப்படுத்திய நடவடிக்கைகளால் எதிர் கொள்ள முடியாது. எனினும் அவர் கொரோனா எதிர்ப்பு நடவடிக்கைகளினூடாக இராணுவ மயப்படுத்தலையே முன்னெடுக்கின்றார்.

இவற்றை நன்கு புரிந்து கொண்டு வாக்குரிமையை கொண்டு பிரயோகிக்க வேண்டும். நடைபெறவிருக்கின்ற பாராளுமன்றத் தேர்தல் களம் முதலாளித்துவத்திற்கும் சோசலிசத்திற்குமிடையிலானதல்ல மாறாக பரந்துப்பட்ட ஜனநாயகத்திற்கும் ஜனநாயக மறுப்பிற்குமான களம். எனினும் ஓரளவாவது ஜனநாயகத்தின் பக்கம் நின்று ஜனநாயகத்தை மறுப்பை நிராகரிக்கும் அரசியல் கட்சிகள் அமைப்புகள் அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் ஓரணியாகவோ, பொது உடண்பாட்டுடனோ தேர்தலை எதிர் கொள்வதாக தெரியவில்லை. மாறாக அவை பலவாறு பிரிந்தே செயற்படுகின்றன. இதனால் எதிர்வரும் தேர்தலில் ஜனநாயக விரோத சக்திகளின் வெற்றியை தடுப்பதற்காக ஜனநாயகத்தின் பக்கம் நிற்கும் மக்கள் விரும்பும் கட்சிகளுக்கும் அமைப்பிற்கு அதேவேளை வெற்றிபெறக்கூடிய வாய்பை கொண்ட கட்சிக்கு அமைப்பிற்கு வாக்களிக்க வேண்டும். ஜனநாயக விரோத சக்திகளை நிராகரித்து ஜனநாயகத்தின் பக்கம் நிற்கும் கட்சிகளின் அமைப்புகளின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை பாராளுமன்றத்தில் அதிகரிக்க வேண்டும்.

W.V. Somaratne

தோழர். டபிள்யூ.வீ. சோமரத்ன

தலைவர்

தோழர். இ.தம்பையா

பொதுச் செயலாளர்



Scanned by TapScanner